Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

5 மதிப்பெண் வினாக்கள்

1. **நன்மைகள்**
(அ) வெளி நாட்டு முதலீடுகள் அதிகரிப்பு: (Increase in Foreign Investment)
ஒரு நாடு வணிகத்தை தாராளமயமாக்குதலின் மூலமாக அதிக அளவில் வெளிநாடுகளிலிருந்து கவர்ச்சிகரமான முதலீடுகளை பெற முடிகின்றது. அம்முதலீடுகள் மூலமாக உள்நாட்டில் மூலதனத்தை பெருக்குவதோடு அதன் பொருளாதாரத்தை பன்மடங்கு பெருக்குவதற்கு உதவுகிறது.
(ஆ) அந்நிய செலாவணி இருப்பு அதிகரிப்பு (Increase the Foreign Exchange Reserve)
வெளி நாட்டு முதலீட்டிற்கும் அந்நிய செலாவணிக்குமான கட்டுப்பாடுகளை தளர்த்தி மூலதனத்தை எளிதில் பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது.
(இ) நுகர்வு அதிகரிப்பு : (Increase in Consumption)
தாராளமயமாக்களினால் ஒரு நாட்டில் பயன்பாட்டிற்கு அதிக அளவிலான பொருட்கள் கிடைக்கவும் அதிக உற்பத்திக்கும் வழிவகை செய்கிறது.
(ஈ) விலைக்கட்டுப்பாடு : (Control Over Price)
ஏற்றுமதி இறக்குமதி தீர்வைகளை நீக்குவதால் நுகர்வோருக்கு குறைந்த விலைக்கு பொருட்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாராளமயமாக்கலினால் இறக்குமதி நாடுகளுக்கு நன்மை விளைவிக்கிறது.
(உ) வெளிநாட்டில் பெறும் கடன்களை குறைக்கிறது (Reduction in external borrowings)
தாராளமயமாக்கலின் மூலம் வெளி நாட்டுக் கடன்களை ஈர்ப்பதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகக் கடன்களை வாங்கும் வாய்ப்பு குறைகிறது.
குறைபாடுகள்:
(அ) வேலையின்மையை அதிகரித்தல் (Increase in Unemployment)
வர்த்தக தாராளமயமாக்கல் பெரும்பாலும் பொருளாதாரத்தின் சமநிலைக்கு வழிவகுப்பதால் சிறு தொழில்களில் சில வளர்ந்தும் சில சிறு தொழில்களில் சரிவும் ஏற்படுகிறது. இதனால் சில தொழிற்சாலைகள் மூடுகின்ற நிலையால் வேலையில்லா நிலை உருவாகிறது.
(ஆ) உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு (Loss to Domestic Units)
தாராளமயமாக்கல் கோட்பாட்டில் குறைந்த நுழைவுக் கட்டுப்பாடுகளுடன் வெளிநாட்டு தொழில்கள் பல நாடுகளில் ஊடுருவ சாத்தியம் அதிகம் உள்ளது. இது உள்நாட்டு தொழில்களை அச்சுறுத்துவதுடன் மற்றும் போட்டியை தோற்றுவித்து உள்நாட்டு தொழிலை அடியோடு ஒழிக்கும் சதியாகவும் கருதப்படுகிறது.
(இ) அயல்நாடுகளை சார்ந்திருத்தலை பெருக்கும்:(Increased Dependence of Foreign Nation)
வர்த்தக தாராளமயமாக்கல் என்பது பலம் பொருந்திய பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து அதிக போட்டிகளை எதிர்கொள்ளும். அது சந்தையை தன் கட்டுபாட்டிற்கு கீழ் கொண்டுவரும் நிலையை உருவாக்க நேரிடலாம்.
2. i) புதிய (LPG) யின் தாக்கத்தை ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.
ii) வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்திழுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியது.
iii) முற்றுமை மற்றும் வணிக தடை சட்டம் (MRTP ACT) 1969 திருத்தியமைக்கப்பட்டது.
iv) கட்டுப்பாடுகளை அகற்றுதல்
v) பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்த உதவுதல்
vi) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கையாள உதவுதல்
vii) வரிகளை மறுசீரமைப்பு செய்தல்
viii) உரிமம் வழங்கும் முறையை அகற்றிட வழிவகுத்து கையாள உதவுதல்
1. உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது, இக்கோட்பாடு தடையற்ற வாணிகத்தை பன்னாட்டு அளவில் உருவாக்கியது.
2. இதன் மூலம் பல நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான தடைகள் உடைத்தெறியப்பட்டன.
3. மேலும் இந்திய பொருளாதாரத்தை உலக நாடுகள் மதிக்கத்தக்க அளவிற்கு வளர்ச்சியடையச் செய்துள்ளது.
3. தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் என்பது
பின்வரும் சிறப்பு கூறுகளை உள்ளடக்கியது.
(i) புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.
(ii) வெளிநாட்டு முதலீடுகள் (FDI & FII) கவர்ந்து இழுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக உதவியது.
(iii) முன்னுரிமை மற்றும் வணிகத்தடை நுட்பம் (MRTP) 1969 சட்டம் (திருத்தியமைக்கப்பட்டது).
(iv) கட்டுப்பாடுகள் அகற்றுதல் (Deregulation).
(v) பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்த உதவி வருவது.
(vi) வரிகளை மறுசீரமைப்பு செய்தல்.

3 மதிப்பெண் வினாக்கள்

4. (i) தாராளமயமாக்கல் என்பது வணிக நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களை அல்லது விதிகளை பொருளாதாரத்தில், சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.
(ii) அரசாங்கத்தின் கொள்கையான வரிவிதிப்பு, ஏற்றுமதி இறக்குமதி தீர்வைகள், மானியங்கள் மற்றும் பிறக்கட்டுப்பாடுகள், நாடுகளுக்கிடையே உள்ள சட்டத்திட்டங்களை தளர்த்தும் நடவடிக்கை ஆகும்.
(iii) தாராளமயமாக்குதலின் மூலமான புதிய தொழிற்கொள்கை உரிமம் முறை அல்லது "உரிமம் ராஜ்" போன்றவற்றை அகற்றியது தாராளமயமாக்குதலின் படிவங்கள் (அல்லது) அமைப்புகள் தாராளமயமாக்கல் தொடர்பாக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
5. பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பது தனியார்மயமாக்கல் எனப்படும்.
முக்கிய கருத்து:

1. பொதுத்துறையை ஒடுக்குதல் அல்லது அதன் ஆதிக்கத்தை குறைத்தல்
2. பொதுத்துறை பங்குகளை தனியாருக்கு விற்றல்
3. புரிந்துணர்வு ஒப்பந்தம்
4. பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடுகளை விலக்கி கொள்ளுதல்.

6. 1. பொதுக் கடன் குறைதல்
2. வணிக ரீதியான ஆபத்தை தனியார் துறைக்கு மாற்றுவது.
3. தனியார் மூலதனத்தை அதிகமாக ஊக்கப்படுத்துவது.
4. புதிய நிறுவனங்களை சந்தையில் நுழைவதற்கு அனுமதிக்கிறது.

7. (i) குறைந்த இயக்கச் செலவுகளின் அடக்கம் மற்றும் புதிய மூல பொருட்கள் மற்றும் கூடுதல் சந்தை அனுகல் மூலம் பெரிய நிறுவனங்கள் போட்டி திறனை பெறுகின்றன.
(ii) பன்னாட்டு நிறுவனங்கள் (MNC's) பொருட்களை தயாரிக்க வாங்க மற்றும் பொருட்களை விற்பனை செய்ய முடிகின்றது.
(iii) உலகமயமாக்கல் நுகர்வோர் பொருட்களின் சந்தையை வெகுவாக (ஏற்றத்துடன்) பெருக்கிட உதவும் வாய்ப்பை உருவாக்கலாம்.

8. (i) இந்தியா 1991 ஆம் ஆண்டு, பன்னாட்டு பண நிதியம் (IMF) என பிரபலமாக அறியப்பட்ட சர்வதேச மறு சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி (IBRD)ஐ அணுகுகிறது மேலும் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த $7 மில்லியனை அமெரிக்க டாலர்களை கடனாக பெற்றது. தனியார் துறை மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் இடையில் வர்த்தக கட்டுப்பாட்டை அகற்றுவதன் மூலம் பொருளாதாரத்தை தாராளமயமாக்கல் என்பது இந்த நிறுவனங்களின் எதிர்பார்ப்பு ஆகும்.
(ii) உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியத்தின் (IMF) நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை (NEP) அறிவித்தது. இந்த புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் பொதுவாக எல்பிஜி (LPG) அல்லது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என்று அழைக்கப்படுகிறது.

9. 1. செயல்திறனை அதிகரித்தல்
2. தொழில்சார் மேலாண்மை
3. போட்டியை பெருக்குதல்
4. அரசின் பொருளாதார சுமையை குறைத்தல்

10. 1. வெளிநாட்டு வர்த்தக கொள்கை
2. ஏற்றுமதி ஊக்குவிப்பு
3. நாட்டிற்கு வருமானத்தை எடுத்து வருவது
4. கட்டண குறைப்பு
5. சிறந்த போட்டிகளை ஊக்குவித்தல்

11. 1. பொது நலனில் கவனமின்மை
2. அரசியல் நிர்பந்தம்
3. பொருளாதார நலிவடைந்த பிரிவுகளை புறக்கணித்தல்

QB 365 Study Material
QUESTION BANK 365

2 மதிப்பெண் வினாக்கள்

12. 

13. தனியார்மயமாக்கல் என்றால் பொதுத்துறை நிறுவனங்களின் உரிமைகளை தனியார் நிறுவனங்களுக்கு மாற்றி தரும் நிகழ்வு அல்லது கொள்கையை குறிப்பிடுவதாகும். சுருங்கக் கூறின் தனியார்மயமாக்கல் என்பது பொதுதுறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

14. 1. வேலையின்மையை அதிகரித்தல்.
2. உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு
3. சமநிலையற்ற வளர்ச்சி.
4. அயல்நாடுகளை சார்ந்திருத்தலை பெருக்கும்.

15. 1. ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள்
2. அணுசக்தி
3. நிலக்கரி மற்றும் லிக்னைட் கனிம எண்ணெய்கள்
4. சுரங்கங்கள்
5. தாதுக்கள்
6. தாமிரம்
7. துத்தநாகம்
8. இரயில்வேக்கான கனிம பொருட்கள்

16. 1. வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல்
2. சந்தை விரிவாக்கம்
3. தொழில்நுட்ப வளர்ச்சி

17. உலக பொருளாதாரத்துடன் ஒரு நாட்டின் பொருளாதாரம் இணைவது உலகமயமாக்கல் எனப்படும்.

18. 1. உலக வங்கி
2. சர்வதேச நாணய நிதியம்

19. 1. வணிகம் மற்றும் வரிவிதிப்பு தொடர்பான பொது உடன்பாடுகள் குறித்து ஆர்தர் டங்கல் கொடுத்த வரைவுத்திட்டம்.
2. 1991 ஆம் ஆண்டு இந்தியாவில் செயல்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை ஆர்தர் டங்கல் வரைவுத்திட்டத்தை ஒட்டியே அமைந்தது.